ஆட்சியர் அலுவலகம்
09 AUG 2024

நீலகிரி மாவட்ட தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) (பொ)
அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.A.V.கல்பனா, M.Sc.,

ந.மு.COLREV/385/2022-A3-NLG, நாள் : 06.08.2024.

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் – நீலகிரி மாவட்டம் – உதகமண்டலம் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகத்தில் மஸ்தூராகப் பணிபுரிந்து பணியிடையே காலஞ்சென்ற ராஜ்குமார் (திரு) (B) என்பவரின் மகள் திருமதி.ரா.அனிதா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து - உத்தரவு

படிக்கப் பட்டவை:

1. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண்.COLREV/385/2022-A3-NLG, நாள்:15.03.2024
2. குன்னூர் வருவாய் வட்டாட்சியரின் கடிதம் ந.க.அ3. எண்.515/2024, நாள்:18.03.2024.
3. இவ்வலுவலக கடிதம் ந.க.அ3.எண்.385/2022, நாள்:29.04.2024.
4. குன்னூர் வருவாய் வட்டாட்சியரின் கடிதம் ந.க.அ3. எண்.515/2024, நாள்:29.05.2024.

---

**உத்தரவு:**

பார்வை 1-இல் படிக்கப்பட்ட செயல்முறைகளின்படி, உதகமண்டலம் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகத்தில் மஸ்தூராக பணிபுரிந்து

பணி காலத்தில் மரணம் அடைந்த திரு.B.ராஜ்குமார் (லேட்) என்பவரின் மகள் திருமதி.ரா.அனிதா என்பவருக்கு கருணை அடிப்படையில், குன்னூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் வழங்கி உத்தரவிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மேற்காணும் தனியர் கடந்த 15.03.2024 பிற்பகல் அன்று பணியில் இணைந்ததாக பார்வை 2-இல் படிக்கப்பட்ட குன்னூர் வட்டாட்சியரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், மேற்காணும் பணியினை வரன்முறை செய்ய ஏதுவாக, தனியரின் பணிப்பதிவேட்டுடன், உரிய படிவத்தில் அறிக்கை சமர்ப்பிக்க பார்வை 3-இல் படிக்கப்பட்ட கடிதத்தில், குன்னூர் வட்டாட்சியரை அறிவுறுத்தப்பட்டதில், பார்வை 4-இல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, குன்னூர் வட்டாட்சியர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட அறிக்கையின் அடிப்படையில், திருமதி.ரா.அனிதா, இளநிலை வருவாய் ஆய்வாளர் என்பவருக்கு கீழ்கண்டவாறு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி (ம) பணிபுரியும் அலுவலகம் | பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1) | திருமதி.ரா.அனிதா<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>குன்னூர் | 15.03.2024<br>பிற்பகல் | 15.03.2024<br>பிற்பகல் |

இதனைத் தொடர்ந்து, மேற்காணும் தனியரது தகுதிகாண் பருவ காலமானது 15.03.2024 பிற்பகல் முதல் துவங்கப்பட்டதாகவும், மேற்படி தனியர்

தனது மூன்றாண்டுகளுக்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய தகுதியான அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும், அவ்வாறு நிருவாக காரணம் இன்றி தனியரின் சொந்த காரணங்களினால், மேற்காணும் காலத்திற்குள் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்யாத நேர்வில், TAMIL NADU GOVERNMENT SERVANTS (CONDITIONS OF SERVICE) ACT, 2016-இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படி, தனியரின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்காணும் தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய குன்னூர் வட்டாட்சியர் அறிவுறுத்தப்படுகிறார்.

ஓம்/-ஏ.வி.கல்பனா
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியர் (பொது) (பொறு)
நீலகிரி மாவட்டம்

பெறுநர்
திருமதி.ரா.அனிதா
இளநிலை வருவாய் ஆய்வாளர்
வட்டாட்சியர் அலுவலகம், குன்னூர்
நகல்
வட்டாட்சியர், குன்னூர்

//உ.ந.உ.ப//

6/8/24

தலைமைப் பொறுப்பாளர் (பொது) 1/3

6/8/24